

FREE EDITION

November - 2016

# ஜோதி

# Jothi
Spiritual Newsletter

ஜோதி 10 : சுடர் 09 - 117

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

## அம்மாவின் அவதாரகால நிகழ்வுகள்
(நவம்பர் மாதம்)

**28.11.1966**
புயல்காற்றில் வேப்பமரம் விழுந்து மறுநாள் அதிகாலை 5.00 மணியளவில் புற்று கரைந்து சுயம்பு வெளிப்பட்ட நாளாகும். “நான் என் தலத்திற்கு வந்து விட்டேன். என்னைப் பின் தொடர்ந்து வருகிறவர்கள் தைரியமாகப் பின் தொடர்ந்து வரலாம்” என்று அன்னை அருள்திரு அடிகளாரை தன் வயமாக்கிக்கொண்டு அடிகளார் இல்லத்திலிருந்து மருவத்தூர் ஆலயத்தில் சுயம்பாக இருக்கிற இருப்பிடத்திற்கு அங்கவலமாகவே உருண்டு வந்தாள்.

**25.11.1977**
அன்னையின் திருவுருவச்சிலை நிறுவனம் பிரதிஷ்டை செய்த நாள். 25ஆம் திகதி நவம்பர் மாதம் 1977 ஆம் ஆண்டு கார்த்திகை பௌர்ணமி தினத்தில் அதிகாலை 3 மணியளவில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## “பசியால் பிணி தீர்த்த மருவத்தூர் மகான்”

உலக மக்கள் யாவரும் மன உளைச்சலாலும், உடற் பிணிகளாலும், மனக்கவலைகளாலும் அன்றாடம் அல்லலுறுவது நாம் நாள்தோறும் காணும் காட்சியாகும்.

அருள்திரு அம்மா அவர்கள் உலக மக்களின் மனக் கவலையை மாற்றுவதற்கு வழங்கி வரும் மாமருந்துதான் ஆன்மிகப் பணிகளாகும். ஆம்! நாமெல்லாம் அம்மாவின் பாதம் பணிந்து என் துன்பத்திற்குப் போக்கீடு இல்லையா என வேண்டிக் கேட்கின்றவர்களுக்கெல்லாம் அம்மா அவர்கள் வழங்கும் அருமருந்தே “தொண்டு செய்! தொடர்ந்து செய்!”என்னும் தாரக மந்திரமாகும்.

அமாவாசை வேள்வியில் குச்சிபோடு ஜோதி ஏந்தி வா! – மருவத்தூரில் தங்கி மூன்று நாள் உணவுத் தொண்டு செய் - சுகாதாரப் பணிசெய்! என அவரவர் ஊழ்வினைக்குத் தக்கவாறு அருமருந்து வழங்கி வருகிறார்கள்.

பேராசிரியர், முனைவர். **கே..கணேசன்** M.Com, M.A., Ph.D.
ஆட்சிக்குழு, ஆளவைமன்ற உறுப்பினர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம் - கலை – பண்பாட்டுக்கல்லூரி - பூம்புகார்

காலம் காலமாகத் தவம் கிடந்தாலும் அருள்திரு அம்மா அவர்களின் திருவடி தரிசனம் கிடைப்பது அரிதாகும். தொண்டு செய்யும் அனைத்துச் சக்திகளுக்கும் அம்மா அவர்களின் அருள்தரிசனம் கிடைத்து வருவது நாமும், நம் முன்னோர்களும் முற்பிறவியில் செய்த தவப்பயனே ஆகும்.

தொண்டு செய்யும் நம் அனைவருடைய உள்ளத்திலும், அம்மா இட்ட பணிகளைச் செய்து முடித்துவிட்டோம் எனும் அகந்தைக் கிழங்கு கூத்தாடுகிறது. நாம் அனைவரும் அம்மாவிற்குத் தொண்டு செய்கிறோமா? இல்லை, நம் பிணிகளையும் துன்பங்களையும் போக்க அம்மா அவர்கள் மறைமுகமாக நமக்குத் தொண்டு செய்கிறார்களா? என்பது புரியாமல் தலைதடுமாறுகிறோம்.

ஆழ்ந்து சிந்தித்தால் நமக்கு உய்தியளிக்க அம்மாவே நமக்குத் தொண்டாற்றுகிறார்கள் என்ற உண்மை புரியும். நாம் அனைவரும் தொண்டாற்றவும் அதன்மூலம் அம்மாவின் அருள் கிட்டவும் அம்மா அவர்கள் நமக்காகச் செய்துவரும் தொண்டுகளை நம்மால் பட்டியலிட முடியாது.

இலவச மருத்துவமனை, கல்விக்கூடங்கள், சமுதாயப் பணியாற்றிட அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டு மன்றங்கள், சக்தி பீடங்கள் ஆகியவற்றைக் கருணைக் கடலாக விளங்கும் அம்மா அவர்கள் சமுதாய நன்மைக்காக அமைத்துக் கொடுத்துத் தொண்டாற்றி வருகிறார்கள்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

“வெளியில் இருப்பவன் உள்ளே வர முடியும். உள்ளே இருப்பவன் வெளியே போனால் திரும்பி வர முடியாது”

## “ஜோதி”

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான ‘சக்தி ஒளி’ மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக ”ஜோதி” ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: “Jothi Newsletter”**


## செய்திச்சுடரில்...


**பசியால் பிணி தீர்த்த மருவத்தூர் மகான்**
Page: 1 – 3

**அம்மாவும் அன்னதானமும்**
Page: 4 - 5

**UPCOMING EVENTS**

**Melbourne: 3, 9, 10**
**Sydney: 6, 8**

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 8

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 7

**Divine Miracles**
Page: 12

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 15

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


# பசியால் பிணி தீர்த்த...

(முன்பக்க தொடர்ச்சி)

“நான் சொல்வதை மட்டும் செய், மற்றவற்றை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்பது அம்மா நமக்கு அருளியுள்ள மந்திரமாகும். அதனால் நமக்குக் கிடைக்கும் பலன்கள் ஏராளம் - ஏராளம். அனைத்தும் அம்மாவின் அருட்செயல்களேயாகும். என் வாழ்வில் அம்மா நிகழ்த்திக் காட்டிய அருட்செயலை விளக்கிக் கூறினால் அம்மா அவர்களின் கூற்றின் முழுப்பொருள் விளங்கும்.

பேராசிரியராகப் பணியாற்றும் எனக்குக் கடந்த 9 ஆண்டுகளாக வயிற்றில் அல்சர் நோய் ஏற்பட்டுச் சொல்லொணா வகையில் துன்புற்று வந்தேன். வீட்டிலும் வெளியிலும் எவ்வுணவு உட்கொண்டாலும் என் உடல்நிலை ஏற்றுக்கொள்ளாது.

நான் உட்கொள்ளும் உணவில் உப்பு, காரம், புளி ஆகியவற்றை அறவே சேர்க்கக்கூடாது. சூழ்நிலை காரணமாக மேற்கொண்ட சுவையான உணவை உட்கொண்டால் உடனடியாக வயிற்றுவலி, வாந்தி, தலைவலி ஏற்பட்டுத் துன்புற்று வந்தேன்.

எந்த விசேடங்களிலும் விழாக்களிலும் உணவு உண்ணாமலே வந்துவிடுவேன். வாழ்நாள் முழுவதும் எந்தச் சுவையுடைய உணவையும் உட்கொள்ளவே முடியாதோ என்ற கவலை நாள்தோறும் என்னை வருத்தி வந்தது.

அம்மா அவர்களின் ‘தொண்டைச் செய்’என்ற அருளாணையை ஏற்று வாழ்நாளெல்லாம் தொண்டாற்றி அம்மாவின் அருளால் துன்பத்தை மறப்போம் என்று எண்ணிய எனக்கு அம்மா அவர்கள் வழங்கிய தொண்டு, தைப்பூசத் திருநாளில் உணவுக் கூடத்தில் தொடர்ந்து எழுபது நாட்கள் தொண்டு செய்யும் பணியாகும்.

எந்த உணவை என் உடல் ஏற்றுக் கொள்ள முடியாதோ, எந்த உணவு என் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்குமோ அந்த உணவுத் தொண்டை எழுபது நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டி அமைந்தது.

மருவத்தூர் அன்னதானக் கூடத்தில் நாள்தோறும் மதியம் மட்டும் தயிர்சாதம் உப்பின்றிச் சாப்பிட்டு வந்தேன். உடலோ மிகவும் மெலிந்து, சோர்வுற்று நலிந்து வந்தது. தலைவலியும், வயிற்றுவலியும், வாந்தியும் ஏற்படவே மருவத்தூர் மருத்துவமனை சென்று உடலைப் பரிசோதித்துப் பார்க்கச் சென்றேன். மருத்துவமனையின் உயர் மருத்துவரிடம் காண்பித்த பொழுது அவர் பல பரிசோதனைகளுக்குப் பின்னர் ஸ்கேன் எடுத்துப் பார்த்தார். உடன் அவர் அல்சர் நோயின் அறிகுறிகள் எதுவுமே ஸ்கேனில் இல்லை. இனி இந்நோயால் துன்புறமாட்டீர்கள் எனக் கூறியதும் என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

மயிலாடுதுறையைச் சுற்றியுள்ள புகழ்வாய்ந்த மருத்துவர்கள் அனைவரிடமும் காட்டி உண்ட மருந்துகளாலும், உடல் முழுதும் பூசிக் கொண்ட மருந்துகளாலும் குணப்படுத்த முடியாத அல்சர் நோய் அம்மா அருளிய உணவுத் தொண்டால் அறவே அற்றுப் போனதை எண்ணி எண்ணித் துள்ளிக் குதித்தேன்.

அப்பொழுதுதான் உணர்ந்தேன். நாம் அம்மாவிற்குப் பணி செய்யவில்லை. அம்மாதான் நமக்குத் தொண்டாற்றுகிறாள் என்ற உண்மையை! அம்மா வழங்கும் பணியின் உன்னதம் எவ்வளவு பொருள் பொதிந்தது என்பது உணர்தற்குரியதாகும்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – November 2016



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| **04.11.2016** | **FRIDAY - வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **11.11.2016** | **FRIDAY - வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **14.11.2016** | **MONDAY – திங்கள்** | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>**"பௌர்ணமி விளக்குப் பூஜை"** |
| **18.11.2016** | **FRIDAY – வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **25.11.2016** | **FRIDAY – வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |

**---Lalor---**

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| **13.11.2016** | **SUNDAY – ஞாயிறு** | 4.00p.m. – 6.00p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |
| **27.11.2016** | **SUNDAY – ஞாயிறு** | 4.00p.m. – 6.00p.m. | **கூட்டு வழிபாடு-Joint Prayer** |

## பசியால் பிணி தீர்த்த... (2ஆம் பக்க தொடர்ச்சி)

கருவறை தரிசனத்தைவிட அருள்திரு அம்மா வழங்கும் அருந்தொண்டினை யாரெல்லாம் செய்து வருகிறார்களோ அவர்களெல்லாம் பிறவிப் பிணியற்று உய்திபெறலாம் என்பதை உணர்ந்து தொண்டு செய்வோம். தொடர்ந்து செய்வோம்.

அருள்திரு அம்மா அவர்கள் யாராலும் புரிந்துகொள்ள முடியாத பரம்பொருளாவாள். அம்மா நம்பால் நிகழ்த்திக் காட்டும் அத்தனை காரியங்களுக்கும் எண்ணிலடங்கா காரணங்கள் உண்டு.

எப்படி நமக்குத் தண்ணீரும், காற்றும் முக்கியமோ அதுபோன்று தான தருமங்கள் முக்கியமானவை. அதிலும் அன்னதானம் ஒன்றே நாம் நம் வருங்காலச் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் சேமநிதியாகும்.

எனவே அன்னதானம் செய்வோம்! இயலாவிடின் அன்னதானத் தொண்டில் நம்மை இணைத்துக்கொண்டு இம்மைத் துன்பம் போக்கி மறுமை இன்பம் எய்துவோம்.

ஓம் சக்தி!

## நீராகாரம்:

**"புளித்த நீரில் அரை உப்புப் போட்டுக் குடித்து வருவது நல்லது, பழைய உணவு முறையே நல்லது. காபி, டீ உடலுக்கு நல்லது அல்ல.**

**பழைய கஞ்சி, பழைய சோறு சாப்பிட்ட காலத்தில் இவ்வளவு ஆஸ்துமா நோயாளிகள் கிடையாது.**

**புதியரக அரிசி அதன் செயற்கை புத்தியைக் காட்டும்."**

**- அன்னையின் அருள்வாக்கு**

# அம்மாவும் அன்னதானமும்

**மே**ல்மருவத்தூர் எனும் குக்கிராாமத்தின் முகவரி உலக நாடுகளின் ஆன்மிகவாதிகளின் அடிமனத்தின் ஆழத்தில் என்றும் நிழலிட்டுக் கொண்டிருக்கிறது. மேல்மருவத்தூரில் கொலுவீற்றிருக்கும் அன்னை பராசக்தியின் பேரருளாலும், அவளின் அவதாரமாக விளங்கும் அருள்திரு அம்மாவின் பெருங்கருணைத் திறந்தாலும் மக்கள் வெள்ளம் அலைகடலென ஆர்ப்பரித்து நிற்பதைக் காண முடிகிறது.

பாலப் பருவத்தைக் கடந்து, கல்வியில் கரையேற வேண்டும் என்ற கவலையில் தோய்ந்த பள்ளிக் குழந்தைகள் ஓர் புறம்.

பருவ எழில் குதிபோடு மங்கை நல்லார் கூட்டம் ஒரு புறம்.

தன் குடும்பம் தலைதூக்கி வாழவேண்டும் எனக்கனவு காணும் மூதாட்டியர் பட்டாளம் ஒரு புறம்.

கல்வித் திறத்தால் உயர்பதவிகள் பெற்று வாழ்க்கையை ஒய்யார மாளிகையில் உலவிவரும் தென்றலாக அனுபவித்து வரும் உயரதிகாரிகள் படை எடுப்பு ஓர்புறம்.

வயல்வெளிகளிலும், தொழிலகங்களிலும் அல்லும் பகலும் போராடித் தொண்டியற்றும் தொழிலாளர் கூட்டம் ஒரு புறம்.

இப்படி அனைத்துத் திறத்தாரும் நாள்தோறும் மேல்மருவத்தூரில் சங்கமித்து, ஓம் சக்தி – ஓம் சக்தி பராசக்தி என ஓங்காரக்குரல் எழுப்பி அருள்திரு அம்மாவை ஆராதித்து வருவது கண்டு அகில உலகமும் அதிசயித்து நிற்கிறது.

அருள்திரு அம்மா அவர்கள் அன்னை ஆதிபராசக்தியின் அம்சமாக, அவளின் அவதாரமாகக் காட்சி கொடுத்து அவரவர்தம் வாழ்வியல் என்னும் வானத்தில் சூழ்கின்ற கருமேகங்களைப் போக்கி ஒளிக்கதிரைப் பரப்பி வருவதே இத்துணைப் பெருங்கூட்டத்திற்கும் காரணமாகும்.

மருவத்தூர் மண்ணைப் மிதிப்போர்க்கெல்லாம் வாழ்க்கையில் மறுமலர்ச்சியையும், புத்துணர்வையும் பொலிவுறச் செய்வதே அனைத்துத் திறத்தாரும் மருவத்தூர் நோக்கி நடை பயில்வதற்குரிய காரணமாகும்.

அன்னை ஆதிபராசக்தியின் அவதாரமாம் அம்மா அவர்கள் இவ்வுலக உய்விற்கு, பக்தி, அன்பு, கருணை, இரக்கம், தொண்டு என அடுக்கிக் கூறப்படும் வாயில்களை வகுத்தளித்தாலும் அவர்கள் இவ்வுலகிற்கு வழங்கிவரும் கொடைகளில் உயிர்க்கொடையாக விளங்குவது அன்னதானமே ஆகும்.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் முன்னேற்றமும், அமைதியும், மனநிறைவும் ஏற்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரும் தன்னலப்பற்று தடிப்பேறா வண்ணம் பிறர் துன்பம் துடைப்பதில் முந்துற வேண்டும் என்பதே அம்மா அவர்கள் கூறும் மூல மந்திரமாகும்.

தொண்டு செய் - தொடர்ந்து செய் என்னும் அம்மாவின் கூற்று அனைவருடைய உள்ளத்திலும் ஆழப்பதிந்து ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உந்து சக்தியை உண்டு பக்தர்கள் அனைவரையும் தொண்டு செய்யத் தூண்டியிருக்கிறது.

ஆம், யாரெல்லாம் தன் சுயத்தைத் தாரைவார்க்கத் தயாராக உள்ளார்களோ அவர்களுக்கெல்லாம் அம்மா கதி மோட்சத்தை அளித்து வருகிறாள். உலக மக்கள் உய்தி பெற அருள்திரு அம்மா அவர்கள் அன்னதானத்தின் பெருமைகளைப் பறைசாற்றி வருகிறார்கள்.

அருள்திரு அம்மா அவர்கள் உளம் கவர்ந்த தொண்டு அன்னதானமேயாகும். அன்னதானமே அம்மா அவர்களின் அடிநாதமாகும். அன்னதானத்திற்கு ஏன் இத்துணை முக்கியத்துவத்தை அம்மா அளித்து வருகிறார்கள்? எனச் சிந்திப்பார்க்கு அம்மாவின் அளவிறந்த கழிவிரக்கம் புலப்படும்.

மனித வாழ்வில் பற்றிப் படர்கின்ற நோய்கள் பல திறந்தன. தலைவலி என்றும், வயிற்றுவலி என்றும், கால்வலி என்றும் அல்சர் என்றும், இதயநோய் என்றும், சர்க்கரை நோய் என்றும், இரத்த அழுத்தம் என்று பல திறந்தன. இவற்றிற்கெல்லாம் நோய் என்று பெயர்.

பசித் துன்பத்திற்கு மட்டும் பிணி என்று பெயர். ஆம் பசிப்பிணி என்று பெயர்.
மேற்கூறிய பட்டியலில் காணப்படும் நோய்கள் யாவும் காலம் தோறும், நேரம் தோறும் நம்மை வருத்துவதில்லை.

காலமெல்லாம் நம் உடலைத் தொற்றி நிற்பவை அல்ல. அவ்வப்போது நம்மை வருத்தும் பொழுது மருந்துகளாலோ, மாத்திரைகளாலோ மாற்றிவிடலாம் மறந்துவிடலாம், ஆனால்,
பசிப்பிணிக்கு மட்டுமே பிணி என்று பெயர். பசித்துன்பம் நேரும் தோறும் நம் உடலைப் பிணித்து நின்று வருத்துவதால் அதற்குப் பசிப்பிணி என்று பெயர் ஏற்பட்டது.

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

## அம்மாவும் அன்னதானமும்...

காலையில் உணவு உண்டுவிட்டோமே என்று நண்பகலில் உண்ணாதிருக்க முடியுமா? நண்பகலில் உண்டுவிட்டோமே என்று இரவில் உண்ணாதிருக்க முடியுமா?

செல்வத்தின் தேக்கத்தில் திளைத்திருக்கும் செல்வச் சீமான்கள் கூட காலந்தவறாது உண்டு களிக்க வேண்டியிருக்கிறது. ஏதோ சில நேரங்களில் உணவு படைக்கக் காலந்தாழ்க்குமாயின் எத்தனை ஆர்ப்பாட்டம் - ஆரவாரம் - கடுஞ்சினம் - வார்த்தைகளைக் கொட்டி முழக்கிச் சினத்தை வெளிப்படுத்துகின்றனர்.

பசிப்பிணி தனிமனித ஒழுக்கத்தைச் சீர்குலைத்துவிடுகிறது. எனவேதான் “பசிப்பிணி எனும் பாவி” என வள்ளுவப் பெருந்தகையும், பட்டினத்தாரும் சீத்தலைச் சாத்தனாரும் பழித்துரைக்கலாயினர்.

பசித்துன்பம் குடிப்பிறப்பை அழிக்கும், விழுப்பம் கொல்லும், கல்விப் பெருமைகளுக்கு இழுக்கு நேரச் செய்யும், நாணமிழக்கத் தூண்டும், நல்லெழிலை அழித்தொழிக்கும், கற்புடை மகளிரொடும் பிள்ளைகளோடும் பிறர் வீட்டு வாயிலில் நிற்கச் செய்யும். இத்துணைப் பேரழிவுகளையும், பேரிழப்புகளையும் தோற்றுவிக்கும் பசித்துன்பத்தைப் போக்க வேண்டும் என்பதே நம் அருள்திரு அம்மாவின் ஆராக் காதலாகும்.

மருவத்தூரிலும், மன்றங்களிலும் சமுதாயப் பணிகள் என்ற பெயரில், உயர் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், முதியோர் காப்பகங்கள் போன்றவற்றை உருவாக்கி உலகோர் துன்பங்களைத் துடைத்தாலும் என்றும் வாழ்வோடு பின்னிப் பிணைந்து நின்று உலகோரை வருத்தும் பசிப்பிணி போக்க முன்னிலை கொடுத்து வருகிறார்கள்.

அம்மாவின் பக்தர்கள் யாவரும் காலம் என்கிற பெருமணற் பரப்பில் அருள்திரு அம்மா அவர்கள் பதித்துச் செல்கின்ற பாதையில் தம் பாதங்களைப் பதித்துப் பசிப்பிணி போக்கும் பொருட்டு அன்னதானத் தொண்டினைக் காலநேரம் பார்க்காது செய்து வருகின்றனர்.

தைப்பூசத் திருவிழாவாம் எழுபது நாட்களும் காலை 7.30 மணிக்குத் தொடங்கும் அன்னதானத் தொண்டு நள்ளிரவு 1.30 மணிவரை தொடரும் அற்புதக் காட்சியை மருவத்தூரில் கண்டு மகிழ்கிறோம்.

ஒவ்வொரு நாளும் அருள்திரு அம்மா அவர்கள் உணவுக்கூடம் வந்து குறைநிறைகளைக் கேட்டறிந்து காரண காரியங்களை விளக்கிக்கூறி ஒருநாளினும் மறுநாள் உணவின் சுவைகூட அறிவு கொளுத்தும் காட்சி அற்புதக் காட்சியாகும்.

ஆன்மிகப் பயணங்களிலெல்லாம் பக்தர்கள் அனைவரும் தரிசிக்க வந்த பொதுமக்கள் அனைவரும் உணவு உண்டனரா எனப் பெற்ற தாயினும் சாலப்பரிந்து விசாரித்த பின்னரே அவர்கள் உணவு உண்ணும் காட்சியை இனி எப்பிறவியில் கண்டு களிக்க முடியும்.

அம்மா அவர்களின் அவதாரப் பெருவிழாவிலும், ஆடிப்பூர விழாவிலும் அமாவாசை திருநாட்களிலும், ஆலயத்தில் அன்றாடமும் ஆலய விழாக்கள் அனைத்திலும் அன்னதானங்களின் வாயிலாகப் பசித்துன்பம் போக்கும் பேரறத்தை அருள்திரு அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தும் பாங்கைப் பாரோர் போற்றிப் பாராட்டுவது நம்மை எல்லாம் அன்னதானத் தொண்டில் மேலும் ஈடுபடத் தூண்டுகிறதல்லவா?

பசித்தவர்க்குப் புசி என்று கூறி, அன்னங்கொடாமலும், அண்டினோர்க்கு ஒன்றும் ஈயாமலும், காயா மரம் போன்றும், வறண்ட குளம் போன்றும், கல்லால் செய்த பசுப்போன்றும் பயனற்ற வாழ்வு வாழ்வது பழித்தற்குரியது என அம்மா அவர்கள் பாலபாடம் போதிப்பதை நாள்தோறும் மனதிற்கொண்டு, பசித்தவர்க்கு ஒன்று ஈயார் என்ற பழிச்சொல் படராத வாழ்வு வாழ்வதற்கு அன்னதானத் தொண்டினைச் செய்ய முந்துற வேண்டும்.

மருவத்தூரில் மட்டுமின்றி, மன்றங்கள், சக்தி பீடங்கள் இருக்குமிடங்கள் மட்டுமின்றித் தமிழகத்திலும், அயல்மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் எப்போதெல்லாம் இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு அழிவு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம், சுழன்றடிக்கும் சூறாவளியும், பொங்கும் எரிமலையும், பிளவுபடுத்தும் பூகம்பங்களும் எப்போதெல்லாம் கோரதாண்டவம் ஆடுகிறதோ அப்போதெல்லாம் அபாயக்குரலுக்கு ஆபத்பாந்தவராக அருள்திரு அம்மா அவர்கள் உறுபசி அளிக்கவும், உறுநோய் தீர்க்கவும் உறுதுணை புரிந்ததை அகில உலகும் மறந்துவிடவில்லை.

அழுகுரலும், ஓலமும் உலகை ஆட்கொண்ட பொழுதெல்லாம் மருவத்தூர் சித்தர்பீடத்திலிருந்து வானளாவிய உதவிகளைச் செய்து உலகோர் துயர்துடைக்க அரிசி மூட்டைகளையும், மருந்துப் பெட்டிகளையும், ஆடைகளையும், அனுப்பி வைத்து அரவணைத்த அருட்காட்சி மறத்தற்பாலதோ?

“உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்” ஆவர் எனும் உயர்நிலையை அருள்திரு அம்மா அவர்கள் நமக்களித்திருக்கும் அன்னதானத் தொண்டினை அனுதினமும் செய்து அருள்திரு அம்மா அவர்களின் அருளாசிக்குப் பாத்திரமாவோம்.

# Sydney - Mandrams - Upcoming Events – November 2016


## Homebush



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 04.11.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.11.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.11.2016 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 18.11.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.11.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**ஆன்மிககுரு**

**அருள்திரு அடிகளார் அருளிய**

# குரு உபதேசங்கள்



## மித மிஞ்சிப் பண ஆசை வளர்ந்து வருகிறது

" அந்தக் காலத்திலும் பிரசவம் நடந்தது. இந்தக் காலத்திலும் பிரசவம் நடக்கிறது. வயிற்றை அறுத்துத்தான் பிள்ளையை எடுக்க வேண்டும். இன்னும் ஐந்து நிமிடத்தில் யோசித்துச் சொல்! என்கிறார் டாக்டர். சுகப் பிரசவ கேசுக்கெல்லாம் கத்தி போட்டுத்தான் குழந்தையை எடுக்க வேண்டும் என்று சொல்கிற அளவுக்கு வந்துவிட்டார்கள். அங்கங்கே மித மிஞ்சிப் பண ஆசை வளர்ந்து வருகிறது.."

## பெண்டுலம் போல் உன் உள்ளம் ஆடிக்கொண்டிருக்கிறது

"ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. இறங்கிக் குடிக்க வேண்டும். மரத்தில் மாங்காய் இருக்கிறது. ஏறிப் பறிக்க வேண்டும்.

ஆன்மிகத்தில் உன் ஈடுபாடு வேண்டும். 10 நிமிடம் தியானத்துக்கு ஒதுக்கிப் பார்! சினிமா மோகத்தை விடு! பெண்டுலம் போல உன் உள்ளம் ஆடிக்கொண்டிருக்கிறது! பணமா? பாசமா? குலமா? குணமா? அருளா பொருளா? ஆன்மிகமா விஞ்ஞானமா? என்றெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிறது.

நீங்கள் ஆன்மிகத்தில் ஈடுபட்டு ஆடினால் அந்தப் பெண்டுலம் சீராக ஓடும்!"

## ஆத்ம சக்தி பெரிது

"இன்றைக்குப் பணம் இருந்தால் தான் மதிக்கிறார்கள். ஆன்ம சக்தி பெரிது. அதிலும் பெண்களுக்கு ஆன்ம சக்தி அதிகம்.

சிங்கம், புலி எறும்புகட்கெல்லாம் இயற்கையிலேயே மோப்ப சக்தி அதிகம். மனிதனுக்கும் அந்த மோப்ப சக்தி இருந்தது. இவன் செயற்கைத்தனமாக வாழ ஆரம்பித்த பிறகு அது குறைந்துவிட்டது'.

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## செய்வினைக்கு ஆட்பட்ட இஸ்லாமிய அன்பர்

மறந்தும் பிறருக்குக் கேடு நினைக்காதே! அவ்வாறு நினைத்தாலோ, செய்தாலோ அது மறுபடி உனக்கே வந்து சேர்வது உறுதி என்கிறார் திருவள்ளுவர். ஆயினும் என்ன? பிறர்க்குத் தீங்கு செய்வதை இக்காலத்தில் ஒரு கலையாகவே சிலர் வளர்த்து வருகின்றனர்.

பிறர்க்குத் தெரியும்படி தீங்கு செய்வது ஒரு வகை. தெரியாமலே செய்வது இன்னொரு வகை. தெரியாமல் தீங்கு செய்வதில் மிகக் கொடுமையானது "பில்லி சூனியம் வைத்தல்"என்பதாகும்.

அன்னை ஒரு முறை "மகனே! ஐந்து ரூபாய்க்குச் சூனியம் வைக்கிற காலம் இது! இதனைப் போக்குவதற்குப் பிரத்தியங்கராவைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும்" என ஏவினாள். அதன்படி அதர்வண பத்ரகாளி எனப்படும் பிரத்தியங்கராதேவி சிலை வைக்கப்பட்டது.

சென்னை மந்தைவெளிப் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய அன்பர் ஒருவர் சூனியத்தால் பெரிதும் அவதிக்குள்ளானார்.

அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு அருள்வாக்கு கேட்க வந்தார். அவருடைய பிரச்சனைகளை மிக விரிவாகக் கூறி, "அடிக்கடி என் சந்நிதிக்கு வந்துபோக வேண்டும்" என்று அன்னை அவரிடம் கூறினாள். அதன்படி தவறாமல் வாரம் ஒருமுறை வந்து அன்னையைத் தரிசித்துவிட்டுச் சென்றார்.

ஒவ்வொரு முறையும் மூன்று எலுமிச்சம்பழங்களை அன்னையிடம் கொண்டு செல்வார். அன்னை அவரை ஆசிர்வதித்து அப்பழங்களைத் தொட்டு, அவற்றில் ஒன்றைத் தனியே எடுத்துத் தருவாள். மறுநாளே அந்தப் பழம் அழுகிக் குழகுழத்துவிடும்.

"மகனே! என்று இந்தப்பழம் அழுகாமல் இருக்கிறதோ அன்று உன் பிரச்சினை தீரும். அதுவரை இருந்துகொண்டுதான் இருக்கும். எவ்வளவு வேண்டியவர்களானாலும் விபூதியோ, திண்பண்டமோ கொடுத்தால் வாங்காதே! தொடாதே!" என்று கடுமையான எச்சரிக்கை செய்தும் அனுப்புவாள்.

ஒருமுறை வெள்ளிக்கிழமை அருள்வாக்கு கேட்க வந்தவர் அன்றிரவு வீடு திரும்பவில்லை. மறுநாளும் வீட்டிற்கு வரவில்லை. அவருடைய உறவினர் அவரைத்தேடி ஆலயத்துக்கு வந்துவிட்டனர். ஆலயத் தொண்டர் ஒருவர் அந்த இஸ்லாமிய அன்பருக்கு வேண்டியவர். அவரிடம் விசாரித்தனர்.

"அவர் வெள்ளிக்கிழமை வந்தார். அருள்வாக்கும் கேட்டார். பஸ் பிடிக்கப் போனார். அவ்வளவுதான் தெரியும்" என்று பலரும் சொன்னார்கள். ஆலயத் தொண்டர்க்கு அவரைப் பற்றிய கவலை பிடித்துக் கொண்டது. அன்னையிடம் அருள்வாக்கு கேட்பதென்று முடிவுசெய்துகொண்டு கேட்டபோது "மகனே! நீங்கள் நினைப்பதுபோல அவனுக்கு ஒரு தீங்குமில்லை. நாளை (திங்கட்கிழமை) மதியம் வீடு திரும்புவான். கவலைப்பட வேண்டாம்"என்று கூறிவிட்டாள். அவ்வாறே திங்கட்கிழமை மதியம் வீடு வந்து சேர்ந்தார். ஆலயத் தொண்டரைப் பார்க்கவும் வந்தார். "என்ன..? இப்படி எல்லோரையும் வேதனைப்பட வைத்துவிட்டீர்களே..? என்னதான் நடந்தது?" என்று ஆலயத் தொண்டர் கேட்டார்.

"ஐயா! அன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30மணிக்குள் அருள்வாக்கு கேட்டுவிட்டு அம்மா ஆசியுடன் எலுமிச்சம்பழங்களையும் பெற்றுக்கொண்டு ஆறே முக்கால் மணியளவில் சோத்துப்பாக்கம் பஸ் நிலையம் வந்துவிட்டேன். சென்னை செல்லும் பஸ்கள் வழக்கமாக நிற்குமிடத்தில் நின்றுகொண்டிருந்தேன். நீண்ட நேரம் காத்திருந்தேன். பஸ் எதுவும் வரவில்லை. எதிர்ப்புறம் திருவண்ணாமலை போகும் பஸ் வந்து நின்றிருக்கிறது. என்னையும் அறியாமல் அந்த பஸ்ஸில் ஏறிவிட்டிருக்கிறேன். என் கவனம் முழுவதும் எங்கோ இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் கண்டக்டர் டிக்கட் கேட்டவுடன் சென்னைக்கு ஒரு டிக்கட் வேண்டும் என்றேன். அவர் என்னைத் தாறுமாறாகப் பேசிவிட்டார். அதற்குள் வண்டி அச்சிறுபாக்கம் வந்துவிட்டது. கண்டக்டர் கேவலமாகப் பேசி இறங்கிவிடுமாறு கூறினார். நானோ திருவண்ணாமலைக்கு ஒரு டிக்கட் கொடு என்று கேட்டு வாங்கிக்கொண்டு பயணமானேன்.

இரண்டு நாள் அங்கேயே தங்க வேண்டும் போல இருந்தது. தங்கிவிட்டு இன்றுதான் திரும்பினேன்" என்றார்.

ஆலயத்தொண்டருக்கு வியப்புத் தாங்கவில்லை. மறுமுறை அன்னையிடம் சென்றபோது அவளே கூறினாள்.

"மகனே! சூனியம் வைத்தவர்கள் அன்றைக்கு அவன் ஊர் திரும்பினால் அவனைத் தீர்த்துக்கட்டும் முடிவுடன் இருந்தார்கள். என்னிடம் வந்தவனை நான் கைவிடுவேனா..? நானே அவனை எதிர்ப்புற வண்டியில் ஏற்றினேன். திருவண்ணாமலையில் தங்க வைத்து, அந்த ஆபத்து நீங்கியதும் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்" என்றாள்.

# Sydney - Mandrams - Upcoming Events – November 2016



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 04.11.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.11.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.11.2016 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 18.11.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.11.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

**- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்**

நம் ஆலயத்தை வைத்துப் பார்க்கும்பொழுது 30 வருடங்களுக்கு முன்பு இருந்த பக்தி நிலை, தற்போது உள்ள பக்தி நிலை எவ்வாறு உள்ளது அம்மா?

நம் ஆலயத்தையும், ஆன்மிக இயக்கத்தையும் பார்க்கும்போது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிடக் கட்டாயம் ஆன்மிகத்திலும், பக்தி நிலையிலும் உயர்ந்து இருக்கிறோம் என்றே சொல்லலாம். அம்மா பக்தியை மட்டும் உணர்த்தாமல், பாசம், அன்பு, தொண்டு, தர்மம் அனைத்தையும் வலியுறுத்தி வருகிறார்கள். பாமரர்களிடமும், பட்டிதொட்டியெங்கும் இன்றைக்கு ஆன்மிகம் பரவி இருக்கிறது என்றால் அதற்கு அம்மாவின் வழிகாட்டுதல்தான் காரணம். ஏதோ வருடத்திற்கு ஒரு முறை குலதெய்வத்திற்கோ, கிராம தேவதைக்கோ பொங்கல் வைத்து, கூழ் ஊற்றி, ஆடு, கோழி, வெட்டி சாமி கும்பிட்டோமா என்று இருந்த மக்கள், முறையான வார வழிபாடு, தொண்டு செய்தல், தர்மம் செய்தல், விழா எடுத்து நடத்துதல், வேள்வி பூசைகள் செய்தல் என்று ஆன்மிகத்தில் முன்னேறி இருப்பது பக்தி நிலையில் முன்னேற்றம் என்றுதானே கூற வேண்டும்?

# Melbourne - Mandrams – Upcoming Events – November 2016

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

### கூட்டு வழிபாடுகள்:

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

**07.11.1999 – மன்றம் 17 வருடங்களை நிறைவு செய்து 18ஆவது வருடத்தில் பயணிக்க குருவின் குருவருளையும் அன்னையின் திருவருளையும் வேண்டும் மன்ற சக்திகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 04.11.2016 | Friday | ஐப்பசி | 19 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 06.11.2016 | Sunday | ஐப்பசி | 21 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 11.11.2016 | Friday | ஐப்பசி | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 13.11.2016 | Sunday | ஐப்பசி | 28 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 18.11.2016 | Friday | கார்த்திகை | 03 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 20.11.2016 | Sunday | கார்த்திகை | 05 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 25.11.2016 | Friday | கார்த்திகை | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 27.11.2016 | Sunday | கார்த்திகை | 12 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

29.11.2016 – செவ்வாய் - அமாவாசை, 14.11.2016 – திங்கள் - பௌர்ணமி

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்

adhiparasakthi.co.uk

ஆன்மிக விடைதேடும்

அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்

"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# Melbourne - Mandrams – Upcoming Events – November 2016

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **20.11.2016** | **Sunday** | **09.00a.m.**<br>**06.10p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

## "வேள்விப்பூசை, வழிபாடு" அன்னையின் அருள்வாக்கு

### வேள்விப்பூசை

"சாதாரணமாக உடைத்து, எறிந்து வீசப்படுகிற பூசணிக்காயை இன்று தெய்வமாக மாற்றியிருக்கிறேன் மகனே! இதுபோல உதிரி பக்தர்களையும் தெய்வமாக்குவேன் மகனே!"

### ஆகம விதிகள்

"ஆகம விதிகள் என்பனவெல்லாம் புறத்தோற்றம் கொண்டவைகளே! அகத்தில்தான் கட்டுப்பாடு இருக்க வேண்டும்."

### கூட்டு வழிபாடு

"மனிதகுல மேம்பாட்டுக்குக் கூட்டு வழிபாடு தேவை".

### கும்பாபிடேகம்

"கும்பாபிடேகம் என்பது குல அபிடேகம். மனித குலத்தில் ஆண்கள், பெண்கள் அனைவரும் சேர்ந்து செய்யக்கூடிய அபிடேகமே கும்பாபிடேகம். இது மற்ற மதங்களில் கிடையாது. இந்து மதத்திற்கே உரிய தனித்தன்மை பெற்றது இது!"

### வேள்வி

"மன்றத்தினர் வேள்விகளை வியாபாரமாக ஆக்கக்கூடாது. அவ்வாறு ஆக்கினால் விஷமாக மாறிவிடும்."

### பஞ்சபூத வழிபாடு

"எல்லாத்துறையிலும் அழுக்கு இருப்பதுபோல அழிவும் இருக்கும். இயற்கையைச் செயற்கையால் வெல்ல முடியாது.

பஞ்சபூதங்களால் அழிவு உண்டாகாமல் இருக்க வேண்டுமானால் பஞ்சபூத வழிபாடு தேவை.

இயற்கையை மாற்ற முடியாது. இயற்கையைப் பக்குவத்தோடு பயன்படுத்தி வாழாவிட்டால் அழிவுதான் வரும்.

இயற்கையை சதிசெய்தால் உங்களால் வாழமுடியாது."

***

# "அவன் இப்போது ஜப்பானில் இருக்கிறான்"

20.08.1995 முதல் 28.08.1995 வரை ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் கோவை மாவட்டத்தில் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டார்கள்.

அருள்திரு அடிகளார் சென்றுகொண்டிருந்தபோது, கிருஸ்துவ தொண்டர் ஒருவர் பின்னால் வரும் வண்டிக்கு வழிகாட்டியாக ஒரு ஸ்கூட்டரில் வந்துகொண்டிருந்தார்.

அந்த அன்பர் வண்டியின் முன்பாக தன் மகனை நிற்க வைத்துகொண்டார். மனைவி 'ஓம் சக்தி கொடி பிடித்த நிலையில் பின்னால் அமர்ந்து வர வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த காட்சியைப் பார்த்த தொண்டர்கள் இந்தப் பெண்மணி எங்கே விழுந்து தொலைக்குமோ என்று அஞ்சியபடி வந்தனர்.

யாருமே அவர்களைக் கண்டு கொள்ளாத நிலையில், அம்மா அவரை அழைத்தார்கள். "நான் இன்று உன் வீட்டிற்கு வருகிறேன். பாதபூசை வைத்துக்கொள்"என்று ஓர் இன்ப அதிர்ச்சி தந்து அவர்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்க வைத்தார்கள்.

பாதபூசையை ஏற்றுக்கொண்டதுடன் அந்தக் குடும்பத்தாரின் பிரச்சனைகள் தீரவும் அருள்பாலித்தார்கள்.

அந்த அன்பரின் மனைவி இலங்கையைச் சேர்ந்தவர். இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக, அவர்கள் குடும்பமே சிதறிப்போயிற்று. உயிர்தப்ப வேண்டி அவரவரும் எங்கெங்கோ ஓடிவிட வேண்டியதாயிற்று. சில வருடம் கழித்து அவரவர் இருப்பிடம் தெரிந்தது. அந்தப் பெண்மணியின் தம்பி மட்டும் எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லை. கலவரத்தில் அவனைக் கொன்றுவிட்டார்களா! உயிர் பிழைத்து எங்காவது இருக்கிறானா? தெரியவில்லை. தாய், தந்தையர்க்கு இதுவே ஒரு பெரிய கவலை!

அவன் எங்கே இருக்கிறான்? எப்படி இருக்கிறான்? உயிரோடுதான் இருக்கிறானா? என்று தெரியாது தவித்தது அந்தக் குடும்பம்.

அம்மா அந்த வீட்டிற்கு எழுந்தருளியபோது "அம்மா என் தம்பி என்ன ஆனான் என்றே தெரியாமல் என் தாய் தந்தையர் தவிக்கிறார்கள்"என்று முறையிட்டார்கள்.

"அவன் உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை. அவன் இப்போது ஜப்பானில் ஒரு கப்பலில் அடிமை வேலையில் இருக்கிறான். உரிய காலம் வரும்போது அவனைக் குடும்பத்தாருடன் சேர்த்து வைக்கிறேன். அவனைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம்" எனக்கூறி அந்தக் குடும்பத்தின் நெஞ்சில் பால் வார்த்தார்கள்.

அந்தத் தொண்டரை நோக்கி, நீ மோட்டார் இயந்திரம் செய்யும் தொழிலையே தொடர்ந்து செய்துகொண்டு வா! உன் தொழிலில் படிப்படியாக வளர்ச்சி கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து விடை பெற்றார்கள்.

## மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு

### உண்மை உணர்வு அவசியம்

"உண்மை உணர்வு அவசியம். தொட்டால் சுருங்கி தொட்டவுடன் சுருங்கித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். அதுபோல ஆன்மாவைத் தொடும்போதுதான் உண்மை உணர்வு வெளிப்படும்."

### ஆன்ம உணர்வு எப்போது வரும்?

"நல்லதை நினைத்து நல்லதையே செய்யும்போது ஆன்ம உணர்வு வந்துவிடும். ஐம்புலன்கட்கு வேலை கொடுக்கக் கூடாது.

# Divine Miracles at Melmaruvathur

## Don't play with God!:

Chettaiappan was an officer in the Commerce Department at Tiruchi. He was an atheist and a follower of Periyar. On the other hand his wife had faith in God. Her sister, who was a devotee of Mother, often asked her sister to bring her husband to Maruvathur and assured her that it would change him into a believer. However, he did not agree to go with her to Mother.

One day a friend of his, who had a good knowledge of numerology, visited him. During the conversation he asked Chattaiappan the name of his eldest son. On learning that it was Paneerselvam, he made some calculations and warned his friend that his son's life would be in danger in his 13th year. He asked him to be careful. The parents were shocked at this but Chettaiappan did not show it outwardly. One day She said, "Why should we listen to the astrologer when Mother Goddess Herself is giving divine revelations at Maruvathur?" Half-heartedly he agreed to accompany her.

On a Sunday the couple reached Maruvathur and went for divine revelation. Mother handed over some neem leaves to the couple and asked then to chew them and tell Her how they tasted. The wife replied that it was not bitter at all. However, the husband hid the truth and asked, "Will a neem leaf be anything but bitter?" At this Mother was annoyed and She said, "Don't play with God! You have come to me in connection with your eldest son. You were told about the danger to his life. I shall save your son. You will not understand this until the time he marries and you have grand children."The couple was astonished and also happy at Mother's words.

Six months later while the boy was returning home from school on his cycle, he was hit by an army truck and was thrown to the other side of the road. The boy luckily was unhurt. The accident had taken place on the very day predicted by the astrologer friend. Although a number of people saw the accident no one came forward to assist the boy. Suddenly a lady of about forty-five, dressed in red, appeared on the scene. She sat next to the boy and gently caressed his hands and feet and made him get up. She escorted him home and left him in front of the house. When the mother heard about the women she ran out of the house and looked. She could not see any one in a red saree.

Some days later the couple again visited Mother. She said, I have saved your son as I promised you on the first day. I brought him up to your house safely and left him there."The couple was so delighted that they became devotees of Mother.

Several years later Chettaiappan suffered a heart attack and had to be rushed to a hospital at Punducherry. He was unconscious for five days and finally the doctors declared him to be a hopeless case. When the wife fell asleep she saw a dream in which Mother appeared before her and told her that although the doctors could not help, She would save him. She saved him and surprised the doctors at the hospital.

**அமாவாசை - பௌர்ணமி விளக்குப் பூஜை பலன்கள்**

| ஐப்பசி – அமாவாசை–பௌர்ணமி : | கார்த்திகை – அமாவாசை–பௌர்ணமி : |
|---|---|
| பசிப்பிணி நீங்கும். பசிப்பிணி அகலுகின்ற விதத்தில் நிறைந்த வளம் உண்டாகும். | நற்கதி உண்டாகும். மன நிம்மதி கிடைக்கும். |

## இந்த கஜலட்சுமி சிலையை மாற்றுங்கள்

அருள்திரு அடிகளார் ஒருமுறை பவானிக்கு வந்த சமயம்... நம் பக்தர்களும், தொண்டர்களும் அடிகளார்க்குப் பாதபூஜை செய்தார்கள். பின்பு, பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கிருந்த அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். அந்தக் கோயில் அர்ச்சகர் அம்மனுக்கு ஆராதனை காட்டும் சமயம், அடிகளார் அந்த அம்மனை வணங்கியவாறே, கருவறை முகப்பின்மேல் பார்வையைச் செலுத்தினார்கள்.

தீபாராதனை முடிந்ததும், கோயில் அர்ச்சகரிடம் அடிகளார், 'இந்தக் கஜலட்சுமி சிலையை மாற்றுங்கள். இது லட்சணமாக இல்லை. பார்ப்பதற்கு அழகாக இருக்கும்படிக் கவர்ச்சியாக அமைத்து இங்கே வையுங்கள்'என்றார்.

'இந்தக் கோயிலுக்கு வருமானம் இல்லை. இதற்குத் திருப்பணி செய்யலாம் என்று வேறு இருக்கிறோம். அப்போது மாற்றிவிடுகிறோம்''என்று கோயில் நிர்வாகத்தினர் கூறினார்கள்.

'முதலில் இந்தச் சிலையை மாற்றுங்கள். பின்பு திருப்பணி செய்யலாம். வருமானம் தானாக வரும். இந்தச் சிலை பின்னப்பட்டு இருக்கிறது'என்றார்கள்.

அதன்பிறகு ஊர்ப் பெரியவர்கள் அடிகளார் சொன்னபடி அழகாகவும், லட்சணமாகவும் இருக்கும்படி கஜலட்சுமி சிலையை வடிக்க ஏற்பாடு செய்தார்கள். சிலை தயாரானதும் கோயிலில் கருவறை வாசலுக்கு மேலே நிறுவினார்கள்.

அது முடிந்த பிறகு அன்றே ஓர் அதிசயம் நடந்தது. அந்த ஊரில் காமாட்சியம்மன் பக்தர் ஒருவர். அவருக்கு லாட்டரி சீட்டில் 25 இலட்சம் ரூபாய் பரிசு விழுந்தது. அவர் சிறந்த பக்தர். ஏற்கனவே பெரும் பணக்காரர். நிறைய தான தருமம் செய்பவர். லாட்டரியில் விழுந்த அப்பெருந் தொகையை காமாட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பிக்கவும், கும்பாபிஷேகம் செய்யவும், அப்படியே நன்கொடையாக வழங்கிவிட்டார்.

"இந்தக் கஜலட்சுமி சிலையை முதலில் மாற்றுங்கள். வருமானம் தானாக வரும்''என்றார் அடிகளார். அவர் சொன்னபடி நடந்தது.

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

<u>தனி இதழ்</u>

ரூபா ₹ 15.00

<u>ஆண்டுச்சந்தா</u>

ரூபா ₹ 180.00 (இந்தியா)

<u>ஆயள் சந்தா (15 ஆண்டுகள்)</u>

ரூபா ₹ 2600.00 (இந்தியா)

**<u>வெளிநாட்டுச் சந்தா (இரண்டு ஆண்டுகள்)</u>**

**இந்திய ரூபா ₹ 3500.00**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address:

Editor, 'Sakthi Oli' Office,
Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,
Tamil Nadu, South India.

**சக்தி ஒளி சந்தாதாரர்களுக்கு!**

சந்தா புதுப்பித்தல் மற்றும் விலாச மாற்றத்திற்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்குக் கடிதம் மூலம் அல்லது 044-27529900 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ள முடியும்.

நேரடியாக இணையத்தளத்தினூடாகவும் ஆன்லைனில் புதுப்பித்தல், புதிய சந்தாக்களை மற்றும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

**www.sakthioli.com**

## மேல்மருவத்தூர்
# அன்னையின் அருள்வாக்கு

### ஆன்மா இல்லையெனில்

“நல்ல எண்ணம், நல்ல நிலை, நல்ல உணவு, நல்ல செயல் செய்விப்பது எல்லாவற்றுக்கும் அடிப்படை ஆன்மாவே! ஆன்மா இல்லையெனில் இயற்கைச் சூழ்நிலை மாறுகிறது. செய்தருமம் மாறுகிறது. நடை மாறுகிறது.
ஆன்மா என்ற விதைக்குத் தருமம் என்ற உரத்தைப் போட வேண்டும்.”

### ஆன்மாவே அனைத்துக்கும் வித்து

“அரசியல், பக்தர்கள், இயற்கை, உணவு, பதவி, செடி, கொடி, மரம் ஆகிய அனைத்துக்கும் வித்து ஆன்மாதான். அந்த ஆன்மாவை அறிய அறிவு தேவை!”

### ஆன்மாவில் அமைதி

“ஆன்மா அமைதியாக இருக்க வேண்டும். ஆணவம் உள்ளவன் அறிவு யாருக்கும் பயன்படாது.”

### கடல் அலையும் - ஆன்மாவும்

“கடல் அலை கரைக்கு அடங்கி இருக்க வேண்டும். அதுபோல ஆன்மா உடலுக்குள் அடங்கி இருக்க வேண்டும். இரண்டும் கடந்துவிட்டால் அழிவுதான் ஏற்படும்.”

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம்

**இருமுடி செலுத்துதல்**

**14.12.2016 முதல் 08.02.2017 வரை**

ஆன்மிககுரு அருள்திரு அடிகளாரின் திருக்கரங்களினால் ஏற்றப்படும்
ஏக ஜோதியான

**தைப்பூச ஜோதி பெருவிழா**

**09.02.2017**

## நவராத்திரி 2016
### அன்னைக்கு சாத்தப்பட்ட காப்புகளை பயன்படுத்தும் முறை

| | |
|---|---|
| குங்குமம், சந்தனம், விபூதி | - நெற்றியில் இட்டுக்கொள்ளவும். |
| மஞ்சள் | - முகத்தில் பூசிக்கொள்ளவும். |
| வேப்பிலை,துளசி,வாசைனத்திரவியம் | - தேய்த்துக் குளிக்கவும். மற்றும் தண்ணீரில் கலந்து குடிக்கவும். |
| சிறுதானிய காப்பு | - சமைத்துச் சாப்பிடவும். |
| கற்கண்டு, மாவிளக்கு | - சாப்பிடவும். |
| நவதானியம் | - சிவப்பு துணியில் கட்டி நிலையடியில் கட்டவும். |

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



# ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

## ஆலய சிறப்பு விழாக்கள்

## 2016 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி | 29 | 14.11.2016 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 14 | 29.11.2016 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 28 | 13.12.2016 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2016 | ஞாயிறு | **கிறிஸ்மஸ்** |
| மார்கழி | 13 | 28.12.2016 | புதன் | **அமாவாசை - வேள்வி** |

## 2017 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 17 | 01.01.2017 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 28 | 12.01.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| தை | 01 | 14.01.2017 | சனி | தைப்பொங்கல் |
| தை | 14 | 27.01.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| தை | 27 | 09.02.2017 | வியாழன் | **சித்தர்பீடத்தில் தைப்பூச ஜோதிப் பெருவிழா** |
| மாசி | 14 | 26.02.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மாசி | 19 | 03.03.2017 | **வெள்ளி** |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 76ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 28 | 12.03.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| பங்குனி | 14 | 27.03.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| பங்குனி | 16 | 29.03.2017 | புதன் | **தெலுங்கு வருடப்பிறப்பு** |
| பங்குனி | 28 | 10.04.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

## 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2017 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 13 | 26.04.2017 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | **சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா** |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 04.11.2016 | வெள்ளி | ஐப்பசி | 19 | சதுர்த்தி விரதம் |
| 05.11.2016 | சனி | ஐப்பசி | 20 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் - சூரன் போர் |
| 11.11.2016 | வெள்ளி | ஐப்பசி | 26 | ஏகாதசி விரதம் |
| 12.11.2016 | சனி | ஐப்பசி | 27 | சனிப் பிரதோஷ விரதம் |
| 14.11.2016 | திங்கள் | ஐப்பசி | 29 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 15.11.2016 | செவ்வாய் | ஐப்பசி | 30 | கார்த்திகை விரதம் |
| 16.11.2016 | புதன் | கார்த்திகை | 01 | ஐயப்பன் படிப்பூசை ஆரம்பம் (60 நாட்கள்) |
| 17.11.2016 | வியாழன் | கார்த்திகை | 02 | சங்கட சதுர்த்தி விரதம் |
| 20.11.2016 | ஞாயிறு | கார்த்திகை | 05 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 25.11.2016 | வெள்ளி | கார்த்திகை | 10 | ஏகாதசி விரதம் |
| 26.11.2016 | சனி | கார்த்திகை | 11 | சனிப் பிரதோஷ விரதம் |
| 29.11.2016 | செவ்வாய் | கார்த்திகை | 14 | அமாவாசை விரதம் |
| 03.12.2016 | சனி | கார்த்திகை | 18 | சதுர்த்தி விரதம் |
| 05.12.2016 | திங்கள் | கார்த்திகை | 20 | ஷஷ்டி விரதம் |
| 10.12.2016 | சனி | கார்த்திகை | 25 | ஏகாதசி விரதம் |
| 12.12.2016 | திங்கள் | கார்த்திகை | 27 | பிரதோஷ விரதம் - குமாராலய தீபம்<br>திருக்கார்த்திகை விரதம் |
| 13.12.2016 | செவ்வாய் | கார்த்திகை | 28 | **சர்வாலய தீபம்**<br>**பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.12.2016 | புதன் | கார்த்திகை | 29 | விநாயக விரதாரம்பம் **-பிள்ளையார் கதை விசேட பூசை ஆரம்பம்**<br>ஸ்ரீ சிவா - ஸ்ரீ விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ்-மெல்போர்ண் |
| 17.12.2016 | சனி | மார்கழி | 02 | சங்கட சதுர்த்தி |
| 18.12.2016 | ஞாயிறு | மார்கழி | 03 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 25.12.2016 | ஞாயிறு | மார்கழி | 10 | ஏகாதசி விரதம் |
| 26.12.2016 | திங்கள் | மார்கழி | 11 | பிரதோஷவிரதம் |
| 28.12.2016 | புதன் | மார்கழி | 13 | அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர் |
| 29.12.2016 | வியாழன் | மார்கழி | 14 | அமாவாசை விரதம் - ஹனுமார் ஜெயந்தி |

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2017 | ஞாயிறு | மார்கழி | 17 | ஆங்கிலப் புத்தாண்டு |
| 12.01.2017 | வியாழன் | மார்கழி | 28 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.01.2017 | சனி | தை | 01 | **தைப்பொங்கல்** |
| 15.01.2017 | ஞாயிறு | தை | 02 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 27.01.2017 | வெள்ளி | தை | 14 | அமாவாசை வேள்வி |